தமிழ் வளர்ச்சித் துறை

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு. வெ. குமாரவேல் பாண்டியன் இ.ஆ.ப., அவர்கள்<br>மாவட்ட ஆட்சித் தலைவர்<br>வேலூர் மாவட்டம் | முதன்மைக் கல்வி அலுவலர்,<br>வேலூர் மாவட்டம் |

திருவள்ளுவராண்டு 2052 / பிலவ / கார்த்திகை - 20

ந.க.எண். 322 /2021, நாள் : 6.12.2021

3727/ஆ4/21

08 DEC 2021

ஐயா,

பொருள் : தமிழ் வளர்ச்சி - திருக்குறள் முற்றோதல் பாராட்டுப் பரிசு - 1330 குறட்பாக்களையும் முற்றோதும் மாணவர்களுக்கு ரூ.10,000/- பரிசு - தமிழ் வளர்ச்சித் துறையால் வழங்கப்பெறுதல் - பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த போட்டி நடத்துதல் - தகவல் தெரிவிக்கக் கோருதல் - தொடர்பாக.

பார்வை :

1. அரசாணை (நிலை) எண்.202,203, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (தவ 1.2)த்துறை, நாள் : 26.12.2011.
2. 06.12.2021 ஆம் நாளிட்ட வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் அனுமதி
3. .11.2021ஆம் நாளில் வெளியாகிய நாளிதழ் செய்தி.

..................

மாணவர்கள் இளம் வயதிலேயே திருக்குறட்பாக்களை மனப்பாடம் செய்தால் அவை பசுமரத்தாணிபோல் பதிந்து, நெஞ்சில் நிலைத்து அவர்களது நல்வாழ்க்கைக்கு வழிகாட்டும். இளம்வயதில் பெறுகின்ற கல்வியறிவோடு, நல்லொழுக்கம் மிக்கவர்களாக மாணவர்கள் உருவாக வழிவகுக்கும். எனவே திருக்குறள் முற்றோதல் செய்யும் மாணவச் செல்வங்களுக்கு பரிசு வழங்கிப் பாராட்டுவது, மாணவர்களின் நல்வாழ்வுக்குத் துணை நிற்பதாகவும், திருக்குறள் நெறி பரவ வழிவகுப்பதாகவும் அமையும். அதனைக் கருத்திற் கொண்டு, 1330 திருக்குறளையும் ஒப்புவிக்கும் மாணவர்கள் திருக்குறள் முற்றோதல் பாராட்டுப் பரிசுத்தொகை ரூ.10,000/-, பாராட்டுச் சான்றிதழ் வழங்கி சிறப்பிக்கப்பெறுகின்றனர்.

அவ்வகையில், நகர்ப்புறம், கிராமப்புறம் ஆகியவற்றில் உள்ள அரசு / அரசு உதவிபெறும் / தனியார் உள்ளிட்ட அனைத்து பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு திருக்குறள் முற்றோதல் குறித்து விழிப்புணர்வினை ஏற்படுத்துவது அவசியமாகிறது. இத்திட்டம் சிறப்பிக்க மாணாக்கர்களை சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் பார்வை3இல் நாளிதழிலும் விளம்பரம் வெளியிடப்பட்டு (நகல் இணைக்கப்பட்டுள்ளது. எனவே அரசு / அரசு உதவிபெறும் / தனியார் உள்ளிட்ட

அனைத்து தொடக்க, நடுநிலை, உயர்நிலை, மேனிலைப் பள்ளிகளுக்கு 1330 திருக்குறளையும் ஒப்புவிக்கும் தகுதிப்பெற்ற மாணவர்களை மட்டும் இப்போட்டிக்கு விண்ணப்பிக்க சுற்றறிக்கை அனுப்பி விழிப்புணர்வினை ஏற்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் தமிழ் வளர்ச்சி துறையின் www.tamilvalarchithurai.com என்ற வலைதள முகவரியில் விண்ணப்பங்களைப் பதிவிறக்கம் செய்து நிறைவுசெய்யப்பெற்ற விண்ணப்பங்களை 25.12.2021 அன்று பிற்பகல் 5.45க்குள் வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக 'அ' பிரிவு கட்டிடம் நான்காம் தளத்தில் அமைந்துள்ள தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் அலுவகத்தில் நேரிலோ, அஞ்சல் மூலமாகவோ அளிக்க வேண்டும். (தொலைபேசி எண். 0416-2256166), பெற்றோர் ஆசிரியர் கழகக் கூட்டங்களிலும் மாணவர்களின் வழியே பெற்றோருக்கும் இது தொடர்பில் விழிப்புணர்வு அளிக்கப்பெறும் வகையில் தலைமை ஆசிரியர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கிடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

<u>திருக்குறள் முற்றோதல் பாராட்டுப் பரிசு பெறுவதற்கான விதிமுறைகள்</u>

- 1330 திருக்குறட்பாக்களையும் முழுமையாக ஒப்புவிக்கும் திறன் பெற்றவராக இருத்தல் வேண்டும்.
- இயல் எண், பெயர், அதிகாரம் எண், பெயர், குறள் எண், பெயர் போன்றவற்றை தெரிவித்தால் அதற்குரிய திருக்குறளைக் கூறும் திறன் பெற்றவராக இருத்தல் வேண்டும்.
- திருக்குறளின் அடைமொழிகள், திருவள்ளுவரின் சிறப்புப்பெயர்கள், திருக்குறளின் சிறப்புகள் ஆகியவற்றை அறிந்தவராக இருத்தல் வேண்டும்.
- வேலூர் வருவாய் மாவட்டத்தில் அமைந்துள்ள பள்ளியில் பயில்பவராக இருத்தல் வேண்டும். அரசு / அரசு உதவிபெறும் / தனியார் பதின்மப் பள்ளிகள் போன்ற பள்ளிகளில் 1ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் பங்கு பெறலாம்.
- தமிழ் வளர்ச்சித் துறையால் வழங்கப்பெறும் இப்பரிசினை ஏற்கனவே பெற்றவராக இருத்தல் கூடாது.
- திருக்குறளின் பொருளும் அறிந்திருப்பின் கூடுதல் தகுதியாகக் கருதப்பெறும்.

இணைப்புடன்-

ஒம்/- பெ. குமாரவேல் பாண்டியன்
மாவட்ட ஆட்சித் தலைவர்,
வேலூர் மாவட்டம்

//நேர்படி அனுப்பப்பெறுகிறது//

### திருக்குறள் முற்றோதல் பரிசுத்தொகை வேண்டும் விண்ணப்பம்

1. மாணவரின் பெயர்

2. பிறந்த நாள் மற்றும் வயது

3. தந்தை அல்லது பாதுகாவலர் பெயர்

4. தற்போது பயிலும் [illegible]

5. பயிலும் பள்ளி / கல்லூரி
   முகவரி மற்றும் தொலைபேசி எண்

6. [illegible]

7. தொடர்பு முகவரி மற்றும் அஞ்சல் குறியீட்டு எண் தொலைபேசி / கைபேசி எண்ணுடன்

8. 1330 குறட்பாக்களையும் முற்றோதல் செய்தமைச் சான்று இணைக்கவும்

9. இதற்கு முன்னர் குறள் பரிசுத்தொகை திங்கள்தோறும் ரூ.1000/- வீதம் அல்லது ஒட்டுமொத்தத் தொகை ரூ.5000/-, ரூ.10,000/- பெறப்பட்டிருப்பின் அது பற்றிய விவரம் அதற்கான சான்று நகல்

10. தெரிவிக்க விரும்பும் பிற தகவல்கள் தனியே இணைக்கப்படலாம்

11. பள்ளி, கல்லூரி படிப்புச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ள விவரம்

#### உறுதிமொழி

திருக்குறள் முற்றோதல் செய்தமைக்குக் குறள் பரிசுத்தொகையாக திங்கள்தோறும் ரூ.1000/- வீதமோ அல்லது ஒட்டுமொத்தத் தொகையாகவோ இதற்கு முன்னர் தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாகப் பெறப்படவில்லை என உறுதி கூறுகிறேன்.

பெற்றோர் / பாதுகாவலரின் ஒப்பம் மாணவரின் ஒப்பம்

## படிப்புச் சான்று

செல்வி / செல்வன் ------------------------------------------------------------------------ என்பவர்

இப்பள்ளியில் / இக்கல்லூரிகளில் ------------------------------------------------------------------------ வகுப்பு /

பாடப்பிரிவில் பயின்று வருகிறார் எனச் சான்றளிக்கப்படுகிறது.

பள்ளித் தலைமை ஆசிரியர் /
கல்லூரி முதல்வர் ஒப்பம்

**வேலூர் மாவட்ட ஆட்சியரின் செய்திக்குறிப்பு:**

[illegible] திருக்குறள் முற்றோதல் செய்யும் மாணவர் செல்வங்களுக்கு பரிசு வழங்கிப் பாராட்டுவது மாணவர்களின் நினைவாற்றல் திறனை வளர்க்கும். திருக்குறள் நெறி வழிநடக்கும் ஆளுமைத் திறனை கருத்தில் கொண்டு, 2015 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் 1330 திருக்குறளையும் ஒப்புவிக்கும் மாணவர்கள் 70 பேருக்கு திருக்குறள் முற்றோதல் பாராட்டுப் பரிசு தலா ரூ.10,000/- வீதம் வழங்கப்படுகிறது. பாராட்டுச் சான்றிதழ் வழங்கி ஆண்டுதோறும் சிறப்பிக்கப்பெறுகின்றனர்.

திருக்குறள் முற்றோதல் பாராட்டுப் பரிசுக்கு கலந்து கொள்ளும் மாணவர்கள் [illegible] திறனாய்வு செய்து தகுதிபெற்றவர்கள் தெரிவுசெய்யப்பெற்று பரிசு பெறுவதற்கு அரசுக்குப் பரிந்துரை செய்யப்பெறுகிறார்கள். 2021 - 2022 ஆம் ஆண்டிற்கான திருக்குறள் முற்றோதல் போட்டியில் பங்கேற்க விரும்பும் மாணவ / மாணவியர்கள் தமிழ் வளர்ச்சித் துறையின் [illegible] என்ற வலைதள முகவரியில் விண்ணப்பங்களைப் பதிவிறக்கம் செய்து நிறைவு செய்யப்பெற்ற விண்ணப்பங்களை வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக 'அ' பிரிவு கட்டிட நான்காம் தளத்தில் அமைந்துள்ள தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் அலுவலகத்திலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ அளிக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு 0416 - 2256166 என்ற தொலைபேசி எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருக்குறள் முற்றோதல் பாராட்டுப் பரிசு பெறுவதற்கான விதிமுறைகள்

- 1330 திருக்குறட்பாக்களையும் முழுமையாக ஒப்புவிக்கும் திறன் பெற்றவராக இருத்தல் வேண்டும்.
- இயல் எண், பெயர், அதிகாரம் எண், பெயர், குறள் எண், பெயர் போன்றவற்றை தெரிவித்தால் அதற்குரிய திருக்குறளைக் கூறும் திறன் பெற்றவராக இருத்தல் வேண்டும்.
- திருக்குறளின் அடைமொழிகள், திருவள்ளுவரின் சிறப்புப்பெயர்கள், திருக்குறளின் சிறப்புகள் ஆகியவற்றை அறிந்தவராக இருத்தல் வேண்டும்.
- வேலூர் வருவாய் மாவட்டத்தில் அமைந்துள்ள பள்ளியில் பயில்பவராக இருத்தல் வேண்டும். அரசு / அரசு உதவிபெறும் / தனியார் / பதின்மப் பள்ளிகள் போன்ற பள்ளிகளில் 1ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் பங்கு பெறலாம்.
- தமிழ் வளர்ச்சித் துறையால் வழங்கப்பெறும் இப்பரிசினை இதற்குமுன்னர் பெற்றவராக இருத்தல் கூடாது.
- திருக்குறளின் பொருளும் அறிந்திருப்பின் கூடுதல் தகுதியாகக் கருதப்பெறும்.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
வேலூர் மாவட்டம்.

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.3727/ஆ4/2021 நாள் : 10.12.2021

பொருள்: தமிழ் வளர்ச்சி - திருக்குறள் முற்றோதல் பாராட்டுப் பரிசு - 1330 குறட்பாக்களையும் முற்றோதும் மாணவர்களுக்கு ரூ.10,000/- பரிசு - தமிழ் வளர்ச்சித் துறையால் வழங்கப்பெறுதல் - பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த போட்டி நடத்துதல் - தொடர்பாக.

பார்வை:

1. அரசாணை (நிலை) எண்.202,203, தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தி (தவ.1.2)த்துறை நாள்: 26.12.2011.
2. வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ந.க.எண்.322/2021, நாள். 06.12.2021.
3. .11.2021-ஆம் நாளில் வெளியாகிய நாளிதழ் செய்தி.

---

பார்வை 2ல் காணும் கடிதப்படி மாணவர்கள் இளம் வயதிலேயே திருக்குறட்பாக்களை மனப்பாடம் செய்தால் அவை பசுமரத்தாணிபோல் பதிந்து, நெஞ்சில் நிலைத்து அவர்களது நல்வாழ்க்கைக்கு வழிகாட்டும். இளம் வயதில் பெறுகின்ற கல்வியறிவோடு, நல்லொழுக்கம் மிக்கவர்களாக மாணவர்கள் உருவாக வழிவகுக்கும். எனவே, திருக்குறள் முற்றோதல் செய்யும் மாணவச் செல்வங்களுக்கு பரிசு வழங்கிப் பாராட்டுவது, மாணவர்களின் நல்வாழ்வுக்குத் துணை நிற்பதாகவும், திருக்குறள் நெறி பரவ வழிவகுப்பதாகவும் அமையும். அதனைக் கருத்தில் கொண்டு, 1330 திருக்குறளையும் ஒப்புவிக்கும் மாணவர்கள் திருக்குறள் முற்றோதல் பாராட்டுப் பரிசுத்தொகை ரூ.10,000/- பாராட்டுச் சான்றிதழ் வழங்கி சிறப்பிக்கப் பெறுகின்றனர்.

அவ்வகையில், நகர்ப்புறம், கிராமப்புறம் ஆகியவற்றில் உள்ள அரசு / அரசு உதவிபெறும் / தனியார் உள்ளிட்ட அனைத்து பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு திருக்குறள் முற்றோதல் குறித்து விழிப்புணர்வினை ஏற்படுத்துவது அவசியமாகிறது. இத்திட்டம் திறன்மிக்க மாணாக்கர்களை சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் பார்வை 3-ல் காணும் நாளிதழிலும் வெளியிடப்பட்டது. (நகல் இணைக்கப்பட்டுள்ளது) எனவே, அரசு / அரசு உதவிபெறும் / தனியார் உள்ளிட்ட அனைத்து தொடக்க, நடுநிலை, உயர்நிலை, மேனிலைப் பள்ளிகளுக்கு 1330 திருக்குறளையும் ஒப்புவிக்கும் தகுதிப்பெற்ற மாணவர்களை மட்டும் இப்போட்டிக்கு விண்ணப்பிக்க சுற்றறிக்கை விழிப்புணர்வினை ஏற்படுத்துமாறு தெரிவிக்கப்படுகிறது. மேலும் தமிழ் வளர்ச்சித் துறையின் www.tamilvalarchithurai.com என்ற வலைதள முகவரியில் விண்ணப்பங்களைப் பதிவிறக்கம் செய்து நிறைவுசெய்யப்பெற்ற விண்ணப்பங்களை 25.12.2021 அன்று பிற்பகல் 05.45 க்குள் வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக அ பிரிவு கட்டிடம் நான்காம் தளத்தில் அமைந்துள்ள தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் அலுவலகத்தில் நேரிலோ, அஞ்சல் மூலமாகவோ அளிக்க வேண்டும் (தொலைபேசி எண்.0416 - 2256166) பெற்றோர் ஆசிரியர் கழகக் கூட்டங்களிலும் மாணவர்களின் வழி பெற்றோருக்கும் இது தொடர்பான விழிப்புணர்வு அளிக்கப்பெறும் வகையில் அனைத்து வகை தலைமை ஆசிரியர்களுக்கும் உரிய அறிவுரைகள் வழங்கப்படுகிறது.

**திருக்குறள் முற்றோதல் பாராட்டுப் பரிசு பெறுவதற்கான விதிமுறைகள்.**

- 1330 திருக்குறட்பாக்களையும் முழுமையாக ஒப்புவிக்கும் திறன் பெற்றவராக இருத்தல் வேண்டும்.
- இயல் எண். பெயர், அதிகாரம் எண். பெயர், குறள் எண், பெயர் போன்றவற்றை தெரிவித்தால் அதற்குரிய திருக்குறளைக் கூறும் திறன் பெற்றவராக இருத்தல் வேண்டும்.
- திருக்குறளின் அடைமொழிகள், திருவள்ளுவரின் சிறப்புப்பெயர்கள், திருக்குறளின் சிறப்புகள் ஆகியவற்றை அறிந்தவராக இருத்தல் வேண்டும்.
- வேலூர் வருவாய் மாவட்டத்தில் அமைந்துள்ள பள்ளியில் பயில்பவராக இருத்தல் வேண்டும் அரசு / அரசு உதவிபெறும் / தனியார் பதின்மப் பள்ளிகள் போன்ற பள்ளிகளில் 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் பங்கு பெறலாம்.
- தமிழ் வளர்ச்சித் துறையால் வழங்கப்பெறும் இப்பரிசினை ஏற்கனவே பெற்றவராக இருத்தல் கூடாது.
- திருக்குறளின் பொருளும் அறிந்திருப்பின் கூடுதல் தகுதியாகக் கருதப்பெறும்.

இணைப்பு: விண்ணப்பம் , படிப்புச் சான்று (ம)
வேலூர் மாவட்ட ஆட்சியரின்
செய்திக்குறிப்பு.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் :

1. அனைத்து வகை பள்ளித் தலைமை ஆசிரியர்கள்,
   வேலூர் மாவட்டம்.
2. மாவட்டக் கல்வி அலுவலர் வேலூர்.
   (தகவலுக்காகவும் தக்க தொடர் நடவடிக்கைக்காகவும் )

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.3727/ஆ4/2021 நாள் : 10.12.2021

---

பொருள் : தமிழ் வளர்ச்சி - திருக்குறள் முற்றோதல் பாராட்டுப் பரிசு - 1330 குறட்பாக்களையும் முற்றோதும் மாணவர்களுக்கு ரூ.10.000/- பரிசு - தமிழ் வளர்ச்சித் துறையால் வழங்கப்பெறுதல் - பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த போட்டி நடத்துதல் -தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை (நிலை) எண்.202.203. தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தி (தவ.1.2)த்துறை. நாள்: 26.12.2011.
2. வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ந.க.எண்.322/2021, நாள். 06.12.2021.
3. .11.2021-ஆம் நாளில் வெளியாகிய நாளிதழ் செய்தி.

---

பார்வை- 2ல் காணும் கடிதப்படி மாணவர்கள் இளம் வயதிலேயே திருக்குறட்பாக்களை மனப்பாடம் செய்தால் அவை பசுமரத்தாணிபோல் பதிந்து, நெஞ்சில் நிலைத்து அவர்களது நல்வாழ்க்கைக்கு வழிகாட்டும். இளம் வயதில் பெறுகின்ற கல்வியறிவோடு, நல்லொழுக்கம் மிக்கவர்களாக மாணவர்கள் உருவாக வழிவகுக்கும். எனவே, திருக்குறள் முற்றோதல் செய்யும் மாணவச் செல்வங்களுக்கு பரிசு வழங்கிப் பாராட்டுவது, மாணவர்களின் நல்வாழ்வுக்குத் துணை நிற்பதாகவும், திருக்குறள் நெறி பரவ வழிவகுப்பதாகவும் அமையும். அதனைக் கருத்தில் கொண்டு, 1330 திருக்குறளையும் ஒப்புவிக்கும் மாணவர்கள் திருக்குறள் முற்றோதல் பாராட்டுப் பரிசுத்தொகை ரூ.10,000/- பாரட்டுச் சான்றிதழ் வழங்கி சிறப்பிக்கப் பெறுகின்றனர்.

அவ்வகையில், நகர்ப்புறம், கிராமப்புறம் ஆகியவற்றில் உள்ள அரசு / அரசு உதவிபெறும் / தனியார் உள்ளிட்ட அனைத்து பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு திருக்குறன் முற்றோதல் குறித்து விழிப்புணர்வினை ஏற்படுத்துவது அவசியமாகிறது. இத்திட்டம் திறன்மிக்க மாணாக்கர்களை சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் பார்வை 3-ல் காணும் நாளிதழிலும் வெளியிடப்பட்டது. (நகல் இணைக்கப்பட்டுள்ளது) எனவே, அரசு / அரசு உதவிபெறும் / தனியார் உள்ளிட்ட அனைத்து தொடக்க, நடுநிலை, உயர்நிலை, மேனிலைப் பள்ளிகளுக்கு 1330 திருக்குறளையும் ஒப்புவிக்கும் தகுதிப்பெற்ற மாணவர்களை மட்டும் இப்போட்டிக்கு விண்ணப்பிக்க சுற்றறிக்கை விழிப்புணர்வினை ஏற்படுத்துமாறு தெரிவிக்கப்படுகிறது. மேலும் தமிழ் வளர்ச்சித் துறையின் www.tamilvalarchithurai.com என்ற வலைதள முகவரியில் விண்ணப்பங்களைப் பதிவிறக்கம் செய்து நிறைவுசெய்யப்பெற்ற விண்ணப்பங்களை 25.12.2021 அன்று பிற்பகல் 05.45 க்குள் வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக 'அ' பிரிவு கட்டிடம் நான்காம் தளத்தில் அமைந்துள்ள தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் அலுவலகத்தில் நேரிலோ, அஞ்சல் மூலமாகவோ அளிக்க வேண்டும் (தொலைபேசி எண்.0416 - 2256166) பெற்றோர் ஆசிரியர் கழகக் கூட்டங்களிலும் மாணவர்களின் வழி பெற்றோருக்கும் இது தொடர்பான விழிப்புணர்வு அளிக்கப்பெறும் வகையில் அனைத்து வகை தலைமை ஆசிரியர்களுக்கும் உரிய அறிவுரைகள் வழங்கப்படுகிறது.

(PTO)

## திருக்குறள் முற்றோதல் பாராட்டுப் பரிசு பெறுவதற்கான விதிமுறைகள்.

- 1330 திருக்குறட்பாக்களையும் முழுமையாக ஒப்புவிக்கும் திறன் பெற்றவராக இருத்தல் வேண்டும்.
- இயல் எண். பெயர், அதிகாரம் எண். பெயர், குறள் எண், பெயர் போன்றவற்றை தெரிவித்தால் அதற்குரிய திருக்குறளைக் கூறும் திறன் பெற்றவராக இருத்தல் வேண்டும்.
- திருக்குறளின் அடைமொழிகள், திருவள்ளுவரின் சிறப்புப்பெயர்கள், திருக்குறளின் சிறப்புகள் ஆகியவற்றை அறிந்தவராக இருத்தல் வேண்டும்.
- வேலூர் வருவாய் மாவட்டத்தில் அமைந்துள்ள பள்ளியில் பயில்பவராக இருத்தல் வேண்டும் அரசு / அரசு உதவிபெறும் / தனியார் பதின்மப் பள்ளிகள் போன்ற பள்ளிகளில் 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் பங்கு பெறலாம்.
- தமிழ் வளர்ச்சித் துறையால் வழங்கப்பெறும் இப்பரிசினை ஏற்கனவே பெற்றவராக இருத்தல் கூடாது.
- திருக்குறளின் பொருளும் அறிந்திருப்பின் கூடுதல் தகுதியாகக் கருதப்பெறும்.

இணைப்பு: விண்ணப்பம் , படிப்புச் சான்று (ம)
வேலூர் மாவட்ட ஆட்சியரின்
செய்திக்குறிப்பு.

ஒ/ந முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

10/12/21

பெறுநர் :

1. அனைத்து வகை பள்ளித் தலைமை ஆசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.

2. மாவட்டக் கல்வி அலுவலர் வேலூர்.
(தகவலுக்காகவும் தக்க தொடர் நடவடிக்கைக்காகவும் )

10/12/21 10/12/21